**தலைப்பு 266 - வவுனியா மாவட்ட செயலகம் / கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 266 - வவுனியா மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 18 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 254.90 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 253.45 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1.45 மில்லியன் அதாவது 0.57 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 194.90 | 193.63 | 1.27 | 0.65 |
| மூலதனம் | 60.00 | 59.82 | 0.18 | 0.30 |
| **மொத்தம்** | **254.90** | **253.45** | **1.45** | **0.57** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 19 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 14 திணைக்களங்களினால் ரூபா 1,482.37 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 1,461.82 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 20.55 மில்லியன் அதாவது 1.39 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

வவுனியா மாவட்ட செயலகத்திற்குரிய 26601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ள படியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ள படியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ள படியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 14.00 | 13.99 | 8.00 | 11.96 | 42.00 | 36.74 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 72.89 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/000/00/0013/0083/000 | 40.52 |
| 6000/000/00/0014/0014/000 | 0.94 |
| 6000/000/00/0016/0072/000 | 31.43 |
| **மொத்தம்** | **72.89** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

வவுனியா மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் பொறுப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்

03 செலவின விடயங்களிற்காக மிகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்புக்கள் அத்தகைய செலவின விடயங்கள் தொடர்பில் 12 சதவீதம் தொடக்கம் 15 சதவீதம் வரையிலான வீச்சிலிருந்தது.

### 3.2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்ட ஏற்பாடு**

(i) மீளமர்த்தப்பட்ட சின்னதம்பன் மற்றும் பறசன்குளம் கிராமங்களில் பொருத்துவதற்காக ரூபா 5.09 மில்லியன் கிரயத்தின் 66 வெப்பகுமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அரச பெறுகை செய்முறையின் 3.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் போட்டி விலைகூறுகள் தேசிய ரீதியில் கோரப்பட்டிருக்கவில்லை.

(ii) மின்சார சபையானது சின்னதம்பன் கிராமத்திற்கு மின்சாரத்தை வழங்கியிருந்ததுடன், 60 சூரிய வெப்ப தெரு விளக்குகளை பொருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 4.62 மில்லியன் தொகையான செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(iii) பறசன்குளம் மற்றும் சின்னதம்பன் கிராமங்களிலுள்ள 80 ஏக்கர்கள் காணிப் பிரதேசத்தை துப்பரவாக்குவதன் மூலம் இடம்பெயர்ந்த நபர்களையும் 150 குடும்பங்களையும் மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், நலனாளிகளை தெரிவு செய்யும் 76 நபர்கள் மாத்திரம் பூந்தோட்டம் நலன்புரி முகாமிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். மீதமாகவுள்ள நபர்களை தெரிவு செய்வதற்கான அடிப்படை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) கமநல அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட 06 சூடு மிதிக்கும் இடங்களின் பௌதீகப் பரிட்சிப்பின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- விவசாயிகளின் பொறுப்பு நிதியத்தை பயன்படுத்தி 06 சூடு மிதிக்கும் இடங்கள் நிர்மாணிப்பதற்காக பொதுவான படிவம் தயாரிக்கப்படாமையால் ஒவ்வொரு சூடு மிதிக்கும் இடத்தின் பரப்பானது ஒவ்வொன்றுக்கு வேறுபட்டிருந்தது. மேலும், சூடு மிதிக்கும் இடத்தை சுற்றி பாதுகாப்பு வேலியினை நிர்மாணித்தலானது அவசியமற்றதாகவிருந்ததுடன் வேலையை நிர்மாணிப்பதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- மதிப்பீடுகளை தயாரிக்கும் போது கமநல சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பான கூறப்பட்ட விலைகளும் வவுனியா மாவட்டச் செயலகத்தினால் கூறப்பட்ட விலைகளும் பயன்படுத்தப்படாமையால், அத்தகைய உருப்படிகளின் கிரயமானது ஒரு சூடு மிதிக்கும் இடங்களிருந்து சூடு மிதிக்கும் இடங்களிற்கு வேறுபட்டிருந்தது.
- சூடு மிதிக்கும் இடத்தின் பாவனை தொடர்பில் உரிய திட்டமொன்று விவசாயிகள் அமைப்புக்களினால் தயாரிக்காமையால் சகலரும் அறுவடையில் ஈடுபடும் காலங்களில் சூடுபிடிக்கும் இடத்தினை அவர்களிடையே பகிர்ந்து வழங்கும் முறை தொடர்பில் பிரச்சினைகள் காணப்பட்டது.
- மாமடுவ, முகாத்தான்குளம், முத்துமாரி நகர் மற்றும் புதுகுளத்தில் சூடு மிதிக்கும் இடத்தின் நிர்மாணிக்கும் போது உரிய நியமத்தில் கிரவல் போடாமையால் பல இடங்களில் வெடிப்பு காணப்பட்டது. 2017 ஏப்ரல் 20 இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென பதிலளிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆகஸ்ட் 08 இல் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பில் நிலைமையானது முன்பு இருந்தவாறே இருந்தது என அவதானிக்கப்பட்டது.

## (இ) விவசாயிகள் பொறுப்பு நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள்

விவசாயிகள் பொறுப்பு நிதியத்தை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட 44 விவசாய காணிகளின் பௌதீகப் பரீட்சிப்பின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மதிப்பீட்டின் DS/V/Agri/Agro/2016/4 ஆம் இலக்க உடன்படிக்கையின் 08 மற்றும் 02 ஆம் உபபிரிவுகளின் பிரகாரம் விவசாய காணிகளின் ஆழமானது முறையே 3.00 மீற்றர்கள் மற்றும் 4.5 மீற்றர்களுக்கிடையில் இருந்ததுடன் 1.5 மீற்றர் பிரதேசமானது சாந்துபோடப்பட்டது. 01 அடியினைச் சுற்றி கொங்கிறீட் இடப்பட வேண்டும். இருந்த போதிலும், 0.333 அடிக்கு கொங்கிறீட் இடப்பட்டிருந்ததுடன் ரூபா 40,737 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
- DS/V/Agri/Agro/2016/15 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் விவசாய கிணறின் 1.5 மீற்றர் மற்றும் 3.0 மீற்றருக்கிடையில் 1.5 மீற்றரானது சாந்துபோடப்பட்டதுடன் ரூபா 9,333 கொடுப்பனவானது வேலையானது நடைபெற்றிருக்காத போதிலும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- DS/V/Agri/Agro/2016/13 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட விவசாயி காணிகளின் 10 மற்றும் 02 ஆம் இலக்க உபமதிப்பீட்டின் பிரகாரம், இரண்டு பக்க தூண்கள் 12.5 மீற்றர் தடிப்பில் சாந்து போடப்பட்டதுடன் கிணறின் அடியானது முறையே 01 அடி வரையிலும் கொங்கிறீட் இடப்பட வேண்டிய போதிலும், 0.25 அடி மாத்திரம் கொங்கிறீட் இடப்பட்டதுடன் ரூபா 28,643 மொத்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- DS/V/Agri/Agro/2016/09 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ், நிர்மாணிக்கப்பட்ட விவசாய காணியின் அடியானது 01 அடி நீளத்தில் கொங்கிறீட் இடப்பட வேண்டிய போதிலும், 0.25 அடி மாத்திரம் கொங்கிறீட் இடப்பட்டதுடன் ரூபா 13,467 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- DS/V/Agri/Agro/2016/08 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட விவசாய காணியின் 01 அடி நீளத்திற்கு கொங்கிறீட் இடப்பட வேண்டியிய போதிலும் 0.1667 அடி நீளத்திற்கு மாத்திரம் கொங்கிறீட் இடப்பட்டு ரூபா 15,990 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- DS/V/Agri/Agro/2016/02 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட விவசாய காணியின் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் 08 மற்றும் 11 உபபிரிவுகளானது பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும், மேற்கூறப்பட்ட வேலைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லையென பௌதீக பரீட்சிப்பில் வெளிப்பட்டது. மதிப்பீட்டின் 02 ஆம் பாகம் பழைய நிர்மாணத்திலிருந்த போதும் வேலையின் பகுதியானது மேற்கொள்ளப்பட்டிருந்தது என குறிப்பிட்டு ரூபா 28,562 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- VN/DS/PL/N/Agri/Well/2016/06 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் விவசாய காணியின் நிர்மாணம் 2016 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும், இது 2017 மார்ச் 09 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உடன்படிக்கையின் 10 ஆம்பந்தியின் பிரகாரம் செலுத்தப்பட்ட ரூபா 38,000 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவில்லை.

- VN/DS/PL/N/Agri/Well/2016/10 ஆம் இலக்க உடன்படிக்கையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட விவசாயக் கிணறின் அடிப்பகுதியானது 0.2 மீற்றர் உயரத்திற்கு கொங்கிறீட் இடப்படவேண்டும். ஆனால், 0.1 மீற்றர் உயரத்திற்கு மாத்திரம் கொங்கிறீட் இடப்பட்டு ரூபா 6,019 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், நிர்மாணம் 2016 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இது 2017 மார்ச் 09 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டோ அல்லது செலுத்தப்பட்ட தொயையானது உடன்படிக்கையின் பந்தி 10 இன் பிரகாரம் அறவிடப்பட்டோ இருக்கவில்லை.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 371(5) ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், செயல் நிமித்த கட்டுநிதிகள் எதற்காக வழங்கப்பட்டதோ அவ்நோக்கம் முடிவடைந்ததும் 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 110,000

கூட்டுத்தொகையான செயல் நிமித்த கட்டுநிதிகள் குறித்த நோக்கம் முடிவடைந்த பின்னர் 01 மாதம் தொடக்கம் 03 மாதங்கள் வரையிலான காலதாமதத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2016 நவம்பர் 18 இன் 07/2016 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரிவு 1 இன் பிரகாரம், திணைக்களத் தலைவரானவர் 2016 திசெம்பர் 31 இற்கு பின்னர் காசுப்புத்தகத்தில் எந்தவித கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்திருக்கவில்லை.

## 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறுபட்ட நடவடிக்கைகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு கொடுக்கப்பட்ட ரூபா 12.35 மில்லியன் தொகை உரிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கிலிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிலிருந்து 12 சந்தர்ப்பங்களில் வைப்பிலிட்டிருந்த தங்குமிட விடுதி காப்பாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 68,120 தொகை செலுத்தப்படாமல் வைப்புக் கணக்கிலிருந்தது.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

26601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான நிலுவையாகவுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 375,904 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக இருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

## 3.6 சொத்து முகாமைத்துவம்

சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

(i) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான மூன்று முச்சக்கர வண்டிகள் 02 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தாமல் விளைவற்றிருந்தது.

(ii) மாவட்ட செயலகத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 07 வாகனங்களின் உரிமையாண்மையை மாற்றுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான அலுவலக தங்குமிட விடுதியின் ME2, ME10 மற்றும் பழைய தங்குமிட விடுதி திருத்தப்பட்டு பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு குறைந்த மாவட்டச் செயலகத்தின் தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 1,269,443 கூட்டுத்தொகையாகும்.

**3.8 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஸ்தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 4.2.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கடன்களை பெறுவதற்கான உரிய ஆவணங்கள், வழங்கப்பட்ட கடன்களின் பயன்படுத்தல் தொடர்பிலான கௌரவச் சான்றிதழ், ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இரத்துச் செய்யமுடியாத கையேற்றல் போன்ற ஆவணங்கள் கடன் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 செயலாற்றல்**

2016 வருடாந்த பாதீட்டின் பிரகாரம், மாவட்டச் செயலகத்தால் செயன்முன்னேற்றத்துடன் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறுள்ளது.

**(அ) மாவட்டச் செயலகத்தின் சுற்றுலா விடுதியின் நிர்மாணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 யூலை 29 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம், சுற்றுலா விடுதிகளின் ரூபா 22,999,190 பெறுமதியான நிர்மாண வேலைகளின் முதுலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களானது 2015 நவம்பர் 29 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆகஸ்ட் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 04 இன் பிரகாரம், ஒப்பந்தகாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களானது ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு நியாயமாகவுள்ளதா இல்லையா என்பதை தொழில்நுட்ப ரீதியில் மதிப்பீடு செய்யாமல் நீடிப்புக் காலம் கொடுக்கப்பட்டமையால் சுணக்கக் கட்டணமானது அறவிட முடியாதவொன்றாகவிருந்தது.

(ii) 2015 திசெம்பர் 28 அளவில் கொடுக்கப்பட்ட நீடிப்பின் பிரகாரம் நிர்மாண வேலை பூர்த்தியாக்கப்பட வேண்டும். பிணை முறியின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது மேலதிகமாக கொடுக்கப்பட்ட நீடிப்பின் பிரகாரம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்த விபரங்களானது அரச பெறுகை செய்முறையின் 8.10.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் முறையான ஊடகத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்காத அதேநேரம், மொத்தக் கிரயமானது நிதிப்பிரமாணம் 20 இன் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடானது இந்த நிர்மாணத்திற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 06 மேலதிக வேலை விடயங்களிற்காக ரூபா 3,833,222 கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது மதிப்பிடப்பட்ட பெறுமதியின் 12.1 சதவீதமாகவிருந்தது. மேலும், மேலதிக வேலைக்காக முன்னைய அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) RO நீர் வடிகட்டிகளை கொள்வனவு செய்தல்**

-------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகை வழிகாட்டியின் 2.7.7 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் RO வடிகட்டிகளை கொள்வனவினை கருத்திற்கொள்ளும் போது பிரதேச பெறுகை குழுவில் தலைவராக மாகாண மட்ட தலைவர் அல்லது அதே நபரொருவரையும் பெறுகையில் ஈடுபட்ட நிறுவனமொன்றின் சிரேஸ்ட தலைவரையும் மற்றும் வேறொரு நிறுவனமொன்றால் பெறுகை செய்முறையின் அறிவுடனான அலுவலகரொருவர் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அதற்கு முரணாக சிங்ஹள பிரதேச செயலகத்தின் 03 உத்தியோகத்தர்கள் அதற்காக உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

(ii) அரச பெறுகை வழிகாட்டியின் 2.8.5 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட வேண்டும். அதனை நியமிக்காமல் ரூபா 4,238,000 பெறுமதியான வடிகட்டிகள் ரூபா 500,000 அதிகார எல்லையை விஞ்சி பெறுகை வழிகாட்டியின் 2.14.01 ஆம் வழிகாட்டியின் ஏற்பாடுகளிற்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், விலைமனுவானது 05 இற்கு மேலான நிறுவனங்களிடமிருந்து கோரப்பட வேண்டியிருந்தபோதிலும், 03 விலைமனுக்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தது.

(iii) அரச பெறுகை வழிகாட்டியின் 5.2.1 (அ) வழிகாட்டியின் பிரகாரம், சந்தை கடையிடல் முறைமையின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர், பொருட்களின் அவசியத்தன்மை, அளவீடுகள், ஏனையவைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். இதனை செய்வதற்கு பதிலாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரையில் பொருட்களின் விபரங்களை உள்ளடக்காமல் விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தது.

(iv) பெறுகை ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த முறைமை விலைமனு ஆவணங்கள் வழங்குனர்களுக்கு அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட முறைமை தொடர்பிலான ஆவண சான்றுகள் தொடர்பில் முறையான பெறுகை செய்முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(v) வவுனியா தெற்கு பிரதேச செய்லகப் பிரிவில் அமைந்துள்ள வடிகட்டிகளுடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பின் போது அத்தகைய வட்டிகளை பயன்படுத்தும் போது அத்தகைய நீர் வளங்களுடன் தொடர்பாக நீர்வளங்கள் சபையிடமிருந்து சிபாரிசுகளை பெற்றுக்கொள்ளாமல் அமுல்படுத்தியமையால், நுகர்வோர்கள் பக்க விளைவுகளை எதிர்நோக்க முடிந்திருக்கும்.

(vi) வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தால் 09 இடங்களில் பதினைந்து RO நீர்வடிகட்டிகள் பொருத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2016 ஒக்தோபர் 25 அளவில், 05 நீர்வடிகட்டிகள் 06 மாதங்கள் காலப்பகுதியிலிருந்து செயற்பாட்டிலிருக்கவில்லை. RO நீர்வடிகட்டிகள் ஒரு வருட உத்தரவாத

காலப்பகுதியை கொண்டிருந்த போதிலும், 2016 ஒக்தோபர் 25 ஆன கணக்காய்வு திகதி வரையிலும் அதனை வழங்கிய நிறுவனங்களிடமிருந்து RO நீர்வடிகட்டிகளை திருத்துவதற்கு தவறியிருந்தது.

(vii) 20 நீர்வடிகட்டிகள் அமைந்துள்ள இடங்களில் நீர் பெறப்படுகின்றதா இல்லையா என்பதற்காக சாத்தியவளக் கற்கை இல்லாமல் ஆர் நீர் வடிகட்டிகள் பொருத்தப்பட்டமையால் நீர்க்கிணறுகள் வறட்சியாகவுள்ள நாட்களில் நீர் வடிகட்டிகள் பயனற்றிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரதேசத்தில் நொச்சிக்குளம் வீதியின் தாரிடல் மற்றும் அபிவிருத்திக்காக ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூபா 1,708,130 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அத்தகைய நிர்மாணங்களின் பௌதீக பரீட்சிப்பின் மதிப்பீட்டின் பிரகாரம் 4''x4'' வீச்சில் கற்களை போடாமல் சொல்லப்பட்ட அளவை விட அதிகமாக போடப்பட்டிருந்தது. மேலும், கற்கள் போடப்பட்டு பக்கப் பிரிவுகளின் நிர்மாணத்திற்கு முன்பாக சுண்ணாம்புக் கலவை போடப்பட்டமையால், கற்களானது இரண்டு பக்கமும் கழுவப்பட்டு போவதற்குரிய இடரொன்றிருந்தது.

**(ஈ) ஆறுஹம்புள்ளாளிவு வீதியிற்கு தாரிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல்**

------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வவுனியா பிரதேச செயலகப் பிரதேசத்தில் ஆறுஹம்புள்ளாளிவு வீதியிற்கு தாரிடல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூபா 1,692,830 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஒக்தோபர் 26 இன் அத்தகைய நிர்மாணத்தின் பௌதீகப் பரீட்சிப்பின், கிரவல் மற்றும் கல்லுடனான 315 மீற்றர்கள் நீண்ட வீதிப்பாதை ஆரம்பிக்கப்பட்டிருந்தது என தென்பட்டது. ஆனால், வீதியின் 215 மீற்றர்கள் 4 அங்குல கற்களில் போடப்பட்டிருந்தது. 180 மீற்றர் 4 அங்குல கற்களில் உருக்கப்பட்டதுடன் றோட் றோலரானது செயற்பாட்டிலிருந்ததுடன் தாரானது மாலை நேரத்தில் போடுவதற்கா உருக்கப்பட்டது. வீதியில் கற்கள் போடப்பட்ட பிரிவிலுள்ள கல்லினை மேற்பார்வை செய்வதற்கும் அதனை பரீட்சிப்பதற்கும் தொழில்நுட்ப பரீட்சகர் இல்லாதிருந்த நேரம் 9, 10, 11, 12 ஏனைய அங்குல அளவிலான கற்களானது 4 அங்குல அளவிலுள்ள கற்களை போடுவதற்கு பதிலாக வீதி மேற்பரப்பில் பிரயோகிக்கப்பட்டது அவதானிக்கப்பட்டது. உருக்கப்பட்ட பிரிவானது சில இடங்களில் பல அளவுகளில் போடப்பட்ட அதேநேரம், 2 மற்றும் 3/4 அங்குல கற்களானது போடப்பட்டதுடன் றோலர் இயந்திரத்தால் இமர்த்தப்பட்டிருந்த போதும் நியமத்துடனான கற்களினை குவித்தல் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதி தொடங்கப்படும் இடத்தில் 100 மீற்றர் தூரத்தில் உருக்கு போடப்பட்டமையால் 03 இடங்களில் கிரவல் லேயரின் தொகை மதிப்பின் அளவீடானது பரீட்சிக்கப்பட்டதுடன் கல்லானது போடப்பட்டதுடன் தாரிடலானது தேவையான நியமம் மற்றும் 4 ½ , 2 மற்றும் 2 அங்குல அளவு உயரத்தில் போடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) 2016 ஒக்தோபர் 26 இன் கணக்காய்வுத் திகதியிலுள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்ட தூரத்திற்கிணங்க கணக்காய்வுத் திகதியான 4 அங்குல மற்றும் 02 அங்குல 04 அங்குல அளவுகளின் உருக்கானது 79.86 மற்றும் 66.86 கன மீற்றர்களில் பன்படுத்த வேண்டியிருந்தது. எனினும், கொடுப்பனவு பதிவேடுகளின் பிரகாரம், 97.18 மற்றும் 92.93 கனமீற்றர்களின் முறையே 4 மற்றும் 2 அங்குல

அளவுகளிலான உருக்கு இருந்தது. அதற்கிணங்க ரூபா 94,400 தொகை முறையே (N3) 17.32 மற்றும் 26.07 கியூப் மீற்றர்களின் முறையே 4 அங்குல மற்றும் 2 அங்குல அளவுகளில் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2016 ஒக்தோபர் 27 கணக்காய்வுத் திகதியில் புடியசின்னகுளம் சிகிச்சை நிலையத்தில் நிர்மாணத்தை பரீட்சிக்கையில் மதிப்பீட்டின் பிரகாரம், அடித்தளத்தின் நீளமானது 2 அடியாக இருக்க வேண்டும் என அவதானிக்கப்பட்டது. ஆனால், 07 இடங்களிலுள்ள அடியினை பரீட்சிக்கையில் அடித்தளத்தின் அளவானது இருக்க 1.8, 1.9, 1.9, 1.6, 1.8, 1.8 மற்றும் 1.9 அடி போன்ற பல்வேறுபட்ட அளவுகளிலிருந்தது.

**(ஊ) வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் பிரிவிலுள்ள 13 நெல் காயப்போடும் தளத்தினை நிர்மாணம் செய்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கிராமிய உட்கட்டமைப்பு வசதி செயற்திட்டத்தின் கீழ் 13 சூடு மிதிக்கும் இடங்களானது வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அனைத்து சூடு மிதிக்கும் இடத்தின் சுவரானது பல இடங்களிலிருந்து வெடிக்கப்பட்டிருந்ததுடன் சில சூடு மிதிக்கும் இடமானது வெடிக்கப்பட்டிருந்ததுடன் சூடு மிதிக்கும் இடத்தின் பராமரிப்பு வேலைகள் யாருக்கும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நாளொன்றுக்கு ரூபா 500 இலிருந்து ரூபா 1,000 தொகையானது அல்லது ஒரு நேரத்தில் சூடு மிதிக்கும் இடத்தின் பயன்பாட்டிற்காக விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்தமையால் அதனை பயன்படுத்துவதை விவசாயிகள் தவிர்க்கின்றனர்.

(ii) சூடு மிதிக்கும் இடத்தின் பெயர்ப்பலகையை தயாரிப்பதற்கான ரூபா 6,000 அதிகூடிய செலவின எல்லையை விஞ்சி, 06 பெயர்ப்பலகைகளை தயாரித்தலிற்காக ரூபா 34,864 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(எ) வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 48 ஏக்கர்களில் அங்கீகரிக்கப்படாத கிரவல் அகழ்வொன்றிருந்த போதிலும், பிரதேச செயலகமானது அதனை நிறுத்துவதற்கு 2016 நவம்பர் 22 வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக பரசன் குளத்தில் காட்டின் 150 ஏக்கர்கள் வெட்டப்பட்டு துப்பரவு செய்யப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு வீடும் 2017 நவம்பர் 04 இலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் அலுவலக வதிவிடமானது தற்பொதுள்ள சீமெந்து நிலத்தை அகற்றுவதற்காக மதிப்பிடாமல் ரூபா 801,384 தொகை செலவழித்து நிலம் பரப்பப்பட்டிருந்தது. மேலும், மேற்கூறப்பட்ட வேலைக்காக வேண்டுதலொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) அரபிக் பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்காக 1969 செப்தெம்பர் 27 இல் 30 வருடங்கள் குத்தகை உடன்படிக்கையின் கீழ் மொஹைதீன் பள்ளவாசலுக்கு காணி கொடுக்கப்பட்டிருந்ததுடன் 18 கடைகளுடனான பாடசாலையொன்றை நிர்மாணித்தவாறு சொல்லப்பட்ட உடன்படிக்கைக்கு முரணாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் முடிவடைந்த பின்னர், மேற்கூறப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தாத காணி தொடர்பாக இந்தக் காணியை மீள அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2015 ஆம் ஆண்டிற்கான 154(6) இன் 3.5(ஆ) பந்தியின் பிரகாரம், வவுனியா மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான அரச விடுதிகள் வேறுபட்ட அரச நிறுவனங்கள், அரசியல் அதிகாரசபைகள் மற்றும் நபர்களுக்கு சொந்தமான அலுவலகங்களுக்கு 05 வருடங்களுக்கு மேலாக கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் அலுவலகர்களுக்கு அரச விடுதி வசதிகளை வழங்குதலானது வரையறுக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய வதிவிடங்களின் வாடகை வருமானது செல்லுபடியற்றதாகவிருந்தது.

### 3.11 வங்கி கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

சிங்கள பிரதேச செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வைப்பிலிடப்பட்டு தேறாத, ஆண்டொன்று கடந்த காசுக் கட்டளைகளின் பெறுமதியானது ரூபா 104,000 தொகையாகும். தேறப்படாத காரணத்தை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.12 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 19 | 03 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 06 | 09 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 350 | 229 | 121 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 64 | 52 | 12 | 01 |
| (v) | ஏனையவை | 02 | 03 | - | 01 |
| | மொத்தம் | 451 | 309 | 145 | 04 |